*4*

# புதன்கிழமை, வியாழக்கிழமை, மற்றும் வெள்ளிக்கிழமை

## மத்தேயு 26:1–35; மாற்கு 14:1–31; லூக்கா 22:1–38; யோவான் 13–17

*"... இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்" (யோவான் 13:1).*

செவ்வாய்க்கிழமையின் விவாதப் போருக்குப் பின்பு, தேவன் இயேசுவுக்கு ஒருநாள் விடுமுறையளித்தார். புதன்கிழமையன்று அவர் எங்கிருந்தார், யாருடன் நேரத்தைச் செலவிட்டார், அல்லது என்ன செய்தார் என்பது பற்றி நாம் அறிவதில்லை. அமைதி நம்மீது இடிமுழக்கம் இடுகிறது! இயேசுவினால் சதுசேயர்கள் நிலைகுலைவிக்கப்பட்டது பற்றிப் பரிசேயர்கள் மகிழ்ச்சியடைந்தனர், ஆனால் இயேசு அவர்களை (பரிசேயர்களை) வாயடைத்தபோது அவர்களின் நகைப்பு விரைவிலேயே வெறுப்பாக மாறிற்று. அவருடைய விரோதிகள், "அவருக்கு நாம் பதில் அளிக்க முடியாதிருப்பதால் அவரை நாம் கொன்று போட வேண்டும்" என்று காரணம் கண்டுபிடித்தனர்/நியாயம் பேசினர்.

இந்த நாளில் இயேசு பணிமும்முரமாய் இராதிருக்கலாம், ஆனால் யூதாஸ் மிகவும் பணி முனைப்புடன் இருந்தான். அவன் இயேசுவைக் காட்டிக் கொடுத்த விஷயம் தூண்டுதலினால் அல்ல மனசம்மதியுடன் வேண்டுமென்றே செய்யப்பட்டதாக இருந்தது. யூதர்களின் உயர்மட்டக் குழுவான சனதெரீன் (ஆலோசனை) சங்கத்தார்கூட, இரகசியக் கூட்டம் கூடுவதில் பணித்துடிப்பாக இருந்தனர். சாத்தானும்கூட, பணிமும்முர மாக இருந்தான். புதன்கிழமை என்பது புயலுக்கு முந்திய அமைதியாக இருந்தது. அந்த நாளை இயேசு தேவனிடம் ஜெபிப்பதில் பயன்படுத்தினார் என்று நீங்கள் யூகிக்கமாட்டீர்களா?

# பஸ்காவுக்கு ஆயத்தம் செய்தல்

மீண்டும் ஒருக்காலும் தூங்காதிருக்க வியாழக்கிழமையன்று காலையில் இயேசு விழித்தெழுந்தார். "வேளை" வந்திருந்தது. புதன்கிழமையன்று பெற்ற ஓய்வுக்குப்பின் தொடர்ந்து, இயேசு சிலுவை நோக்கிய தமது வீறு நடையைப் புதுப்பித்துக் கொண்டார். நடக்கப்போகின்றவற்றின்மேல் அவர் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தார். மற்றவர்கள் தாங்களே அவ்வாறு இருந்ததாக நினைத்தனர், ஆனால் அவர்கள் அவ்வாறு இருக்க வில்லை. இயேசு தாமே சிலுவையைத் தொடங்கி வைத்து அதைக் கொண்டு வந்தவராயிருந்தார். அவர் தீர்மானித்தவராக இருந்தார், ஆனால் அவசரப்படவில்லை.

பஸ்கா உணவுக்கு ஆயத்தம் செய்தல் என்பதே இந்த நாளுக்கான குறிக்கோளாக இருந்தது (மத்தேயு 26:17-19; மாற்கு 14:12-16; லூக்கா 22:7-13). குடத்தைச் சுமந்து செல்லும் மனிதர் ஒருவரைக் கண்டு அவரைப் பின் செல்லும்படிக்கு இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களுக்குக் கூறினார். அது "பெண்களின் வேலை" என்னப்பட்டிருந்ததால் எருசலேமில் அவ்வேலையைச் செய்யும் ஒரே ஒரு மனிதராகவே அம்மனிதர் இருந்திருப்பார். இயேசு கூறியபடியே அப்போஸ்தலர்கள் செய்தனர், அப்போது அவர்கள் ஆயத்தம் செய்விக்கப்பட்டிருந்த அறைவீடு ஒன்றைக் கண்டனர். இது எவ்வளவு திகைப்புக்கு உரியதாக உள்ளது என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள்! அவர்களுக்கு ஒரு பெரிய அறைவீடு தேவைப்பட்டது. பஸ்கா என்ற பண்டிகை ஒரு குழுவினருக்கானதாக இருந்தது. எருசலேம் நகரில் மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தோடிற்று. நிச்சயமாகக் காலிஅறை எதுவும் இருந்திருக்காது. ஆனால் இந்த அறையானது காலியாக இருந்தது மட்டுமின்றி, அது ஆயத்தமாக்கப்பட்டும் இருந்தது! இது எவ்வாறு நடந்திருக்க முடியும்? தேவனுடைய பயபக்திக்குரிய அருளிரக்கம் இங்கு கிரியை செய்தது! நமது வாழ்விலும்கூட சாத்தியமற்றவைகளைத் தேவன் சாத்தியமானவைகளாக்கக் கூடும்.

இந்தப் பஸ்காவை அப்போஸ்தலர்களுடன் புசிக்க இயேசு ஆழ்ந்த விருப்பம் கொண்டிருந்தார் (லூக்கா 22:14-16). இதற்கு பல காரணங்கள் தரப்பட முடியும்: (1) இயேசு நெருங்கி வந்து கொண்டிருந்த தமது பாடுகளினிமித்தம், இந்தப் பஸ்காவைப் புசிப்பதற்குத் தாம் கொண்டிருந்த விருப்பத்தைப் பற்றி அறிவித்தார். அவர் அப்போஸ்தலர்களின் தோழமையை விரும்பினார், அது அவருக்குத் தேவையாயிருந்தது. (2) மேலும், இது தேவனுடைய கடைசி பஸ்கா உணவாயிருந்தது. மோசேயின் பிரமாணத்தை இயேசு சிலுவையில் அறைந்தார் (கொலோசெயர் 2:14). தேவன் கொடுத்ததைத் தேவனே எடுத்துக்கொண்டார். (3) இப்பொழுது இயேசு நமது தொடர்ச்சியான பஸ்காவாக இருக்கிறார் (1 கொரிந்தியர் 5:7). (4) மேல் அறைவீட்டில் பஸ்கா உணவை உண்ணும் இந்தச் சூழ்நிலையில், இயேசு தமது இராப்போஜனத்தை ஏற்படுத்தினார்.

இரு விஷயங்கள் நமது கவனத்தை ஈர்க்கின்றன: (1) வேத வசனங்களின்

அதிகாரத்துவம் மற்றும் (2) இயேசுவின் கீழ்ப்படிதல். இயேசு, தேவனுடைய பிரமாணத்தைக் கடைப்பிடித்தார்! அவர் மோசேயின் பிரமாணத்தின்கீழ் பிறந்து, வாழ்ந்து, மரித்தார். அவர் மோசேயின் பிரமாணத்தினுடைய ஒவ்வொரு எழுத்திற்கும், சரியான ஆவியில் கீழ்ப்படிந்தார் (மத்தேயு 5:17-20), ஆனால் அவர் பரிசேயர்களின் மனிதரால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு இணங்காதிருந்தார். *வேத வாக்கியங்களின் மதிப்பைக் குறைக்காதீர்கள். கள்ளப் போதகர்களையும் கள்ளப் போதகங்களையும் அன்பின் ஆவியுடன் எதிர்த்து நில்லுங்கள்.*

## ஒரு மேல்துண்டுடன் ஊழியம் செய்தல்

இப்பொழுது நாம் யூதர்களின் வெள்ளிக்கிழமையினுடைய தொடக்க வேளையான வியாழக்கிழமை இரவு நேரத்திற்கு வருகிறோம். இயேசு மரிக்கவிருந்த இவ்வேளையில், யார் பெரியவர் என்பது பற்றி அப்போஸ்தலர்கள் வாக்குவாதம் செய்துகொண்டிருந்தனர் (லூக்கா 22:24-30). யூதாஸ் இதில் ஈடுபட்டிருக்கக் கூடுமா? அவன் மரியாளுக்கும் இயேசுவை கனப்படுத்தின அபிஷேகத்திற்கும் எதிரான கலகத்தை வழி நடத்தியிருந்தான் (யோவான் 12:1-8). அவனது ஆவியானது அவன் கொண்டிருந்த இருதயத்தின் வகையைக் காட்சிப்படுத்திற்று.

ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு நடத்துனர் இருக்க வேண்டியுள்ளது. யாரேனும் ஒருவர் பொறுப்பாளியாயிருக்க வேண்டியுள்ளது. இயேசு பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் தமது நடத்துனர்களாக இருக்கும்படிக்குக் குறித்திருந்தார். அப்போஸ்தலர்களின் மத்தியில் வெறுப் புணர்வோ, பொறாமையோ அல்லது அதிகாரத்திற்கான போராட்டமே இருந்திருக்கக் கூடுமா?

இயேசுவை யூதாஸ் காட்டிக் கொடுத்த செயலானது தூண்டப்பட்ட முடிவாக இருக்கவில்லை. உணவு வேளையில் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கை வரிசை அமைவுமுறையானது கலகத்தைத் தூண்டி விட்டிருக்க லாம், ஆனால் பிரச்சனை இன்னும் மகாப்பெரியதாக இருந்தது. இயேசு, "உங்களுக்குள்ளே அப்படியிருக்கக் கூடாது" என்று கூறி (மத்தேயு 20:20-28; மாற்கு 10:35-45), புற தெய்வ வணக்கத்தாரின் அதிகாரத்துவத்தினு டைய விக்கிரகாரதனைக்கு எதிராகப் போதித்திருந்தார். யாக்கோபும் யோவானும் (அவர்களின் தாயுடன் வந்து) விசேஷித்த சலுகையையும் அதிகாரத்தையும் வேண்டிக்கேட்டனர். பிறரைத் தள்ளிவிட்டு முன்னேறுதல் மற்றும் பிரதான இருக்கைகள்மீது பெருவிருப்பம் கொள்ளுதல் ஆகியவற்றைப் பற்றி இயேசு அதிகம் கூறியிருந்தார் (மத்தேயு 23:6-12; மாற்கு 12:38-40; லூக்கா 20:45-47 ஆகியவற்றைக் காணவும்). இன்றைய நாட்களில் நாமும்கூட மேட்டிமை மற்றும் முரட்டுத்தனம் ஆகியவற்றினால் விளையும் இதே போன்ற பிரச்சனைகளைக் கொண் டுள்ளோம். இயேசுவினால் காட்சிப்படுத்தப்பட்ட தாழ்மையான எண்ணப்போக்கை (நமக்குள்) மேம்படுத்திக்கொள்வதன்மூலம் இவற்றை நாம் வெற்றி கொள்ளமுடியும் (பிலிப்பியர் 2:5-8).

*இயேசு தாம் சகிக்கவிருந்த யாவற்றையும் எவ்வாறு கையாண்டார்? அவர் கூக்குரலிடவோ, பயமுறுத்தவோ, அல்லது வன்மையாகக் கடிந் துரைக்கவோ இல்லை. நாம் இயேசுவின் இடத்தில் அவருக்குப் பதிலாக இருந்திருந்தால், நாம் தேவனிடத்தில், "எங்களுக்கு ஒரு புதிய அப்போஸ் தலர்களின் குழு தேவை" என்று தேவனிடத்தில் ஜெபித்திருப்போம்! அவர் இவ்வாறு செய்வதற்குப் பதிலாக, அமைதியாகப் போதித்தார், போதித்தார்! அவர் ஒரு மேல் துண்டை எடுத்துக்கொண்டு, அவர்களின் பாதங்களைக் கழுவினார் (யோவான் 13:1-17ஐக் காணவும்). அமைதியானது காதடைக்கச் செய்வதாக இருந்தது. அது பேதுருவின் உரத்த குரலினால் கலைக்கப் பட்டது: "நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவுவதில்லை!" உறுதியாக, ஆயினும் மென்மையாக, இயேசு பேதுருவை அமைதிப்படுத்தினார். பாதங்களைக் கழுவுதல் என்பது பாதங்கள் கழுவப்படுதலைக் காட்டிலும் சுலபமானதாக உள்ளது. தேவகுமாரன் ஒரு மேல் துண்டைக் கொண்டு, தமது சபைக்கு அஸ்திபாரம் இடத் தொடங்கினார். அவர் தாம் "ஊழியக் காரனாக" இருப்பதாக அறிவித்தார் (லூக்கா 22:27ஐக் காணவும்). யூதாஸ் உட்பட அங்கிருந்தவர்களின் பாதங்களை இயேசு கழுவினார். பின்பு அவர் தமது அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த பல எச்சரிக்கைகளில் முதலா வதைத் தொடங்கினார், ஆனால் அவர்களுக்கு அது வெற்றிகரமானதாக இருக்கவில்லை.*

## காட்டிக் கொடுப்பவன் ஒருவனை அடையாளப்படுத்துதல்

*பஸ்கா உணவின்போது இயேசு, வரவிருந்த காட்டிக் கொடுக்கப்படுதல் பற்றி அறிவித்தார். யூதாஸ் காட்டிக்கொடுப்பவனாயிருப்பான் என்பது மற்றவர்களுக்குத் தெளிவாயிருந்ததென்று நாம் நினைக்கலாம், ஆனால் விஷயம் அப்படியிருக்கவில்லை. அப்போஸ்தலர்கள் தங்கள் மத்தியில் உள்ள பிறர் (அப்போஸ்தலர்) எவரும் கர்த்தரைக் காட்டிக் கொடுப்பார் என்று நம்பவில்லை ... ஆனால் தாம் அதைச் செய்துவிடக் கூடுமோ என்று ஒவ்வொருவரும் அச்சம் கொண்டனர் (மத்தேயு 26:21-25; மாற்கு 14:18-21; லூக்கா 22:21-23; யோவான் 13:21-30). யூதாஸ், "அது நானோ?" என்று கேட்டான் (மத்தேயு 26:25). இயேசு தாம் யாருக்கு "துணிக்கையைத்" தோய்த்துக் கொடுப்பாரோ அவனே தம்மைக் காட்டிக் கொடுப்பவனா யிருப்பான் என்று அப்போஸ்தலர்களுக்குக் கூறினார் (யோவான் 13:26). அவர் அந்தப்படி அப்பத்தை யூதாஸுக்குக் கொடுத்ததை, பிற அப்போஸ் தலர்கள் கவனிக்க தவறியது, திகைப்புக்குரியதாக உள்ளது. இயேசு அறிந்தார் என்பதை யூதாஸ் அறிந்தான்! (மத்தேயு 26:25ஐக் காணவும்.)*

*பல ஆண்டுகளுக்கு முன்பு, ரியூவெல் லெம்மன்ஸ் என்பவர் "அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப் போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது" என்று கூறுகிற யோவான் 13:30ன் அடிப்படையில், "அப்பொழுது இராக்காலமாயிருந்தது" என்ற தலைப்பி லான பிரசங்கம் ஒன்றைக் கொண்டிருந்தார். தேவன் ஒளியாக இருக்கிறார்;*

பாவம் இருளாக உள்ளது. யூதாஸ் இருளுக்காக ஒளியை விட்டுச் சென்றான். யூதாஸிற்குள் சாத்தானுடைய பிரவேசம் மாயமானதோ அல்லது இயற்கைக்கு மேலானதோ அல்ல. அவனை யூதாஸ் தனக்குள் அனுமதித்து வரவேற்றான். *இருளுக்காக ஒளியை விட்டுவிடுதல் என்பது எவ்வளவு பரிதாபகரமானது!* யோவான் 13:34, 35ல் உள்ள பின்வரும் வார்த்தைகளை இயேசு கூறுவதற்கு முன்பாகவே யூதாஸ் அவ்விடத்தை விட்டுச் சென்றிருந்தான்: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்." பாவமானது பேரழிவான துன்பத்தை உண்டாக்குகிறது; நீங்கள் தவற விடுகிறவற்றில் பாவத்தின் துன்பத்தினுடைய ஒரு பகுதி உள்ளது. யூதாஸ் மிகவும் அதிகமானதைத் தவறவிட்டான்! உயிர்த்தெழுந்த கர்த்தரை அவன் ஒருக்காலும் காணவில்லை!

## அவர் தமது இராப்போஜனத்தை ஏற்படுத்துதல்

இயேசு யூதாஸை அனுப்பிய பின்பு, கர்த்தருடைய இராப்போஜனம் என்று நாம் அழைக்கும் நினைவுகூருதலுக்கான விருந்தை அவர் ஏற்படுத்தினார் (மத்தேயு 26:26-29; மாற்கு 14:22-25; லூக்கா 22:17-20; 1 கொரிந்தியர் 11:23-26). யோவான் 6:48-58 வசனப்பகுதியை வாசியுங்கள். இது கர்த்தருடைய இராப்போஜனத்திற்கான குறிப்பல்ல, ஆனால் இது உபதேச சத்தியமாக உள்ளது. நாம் இரட்சிக்கப்படுவதற்கு கிறிஸ்துவை - அவரது வாழ்வு, போதனை, மற்றும் இரட்சிப்பு ஆகியவற்றை - உட்கொள்ள வேண்டும்.

கர்த்தருடைய இராப்போஜனம் ஒரு கூட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. தொடக்ககால சபையார் அதில் பங்கேற்கக் கூடி வந்தனர் (நடபடிகள் 20:7). புதிய ஏற்பாட்டு ஆராதனையானது அதன் - அப்பம் மற்றும் பாத்திரம் என்ற - எளிமையில் மகிமைப்படுகிறது.

## கடைசி விவரங்கள்

அடுத்ததாக இயேசுவின் கவனம் பேதுருவினிடமாகத் திரும்பிற்று, அவர் (பேதுரு) எல்லையற்ற ராஜபக்தியை வாக்களித்தார். சேவல் கூவுமுன், பேதுரு மூன்றுமுறை இயேசுவை மறுதலிப்பார் என்று இயேசு கூறினார். மத்தேயு 26:33-35; மாற்கு 14:29, 30; யோவான் 13:36-38 ஆகியவற்றை வாசிக்கவும். லூக்கா 22:31-34 அதிக விவரங்களை அளிக்கிறது. சாத்தான் பேதுருவை விரும்பினான், ஆனால் இயேசு தாம் அவருக்காக ஜெபித்திருந்ததாகக் கூறினார். இயேசு இதற்குச் சமமான அளவு யூதாஸுக்காக ஜெபித்திருந்தாரா? நிச்சயமாகவே, அவர் ஜெபித்திருந்தார். நமது எல்லா ஜெபங்களும் நாம் விரும்புகிறவாறே பதில்

*அளிக்கப்படக் கூடுவதில்லை!*

*யோவான் 17ல் உள்ள உண்மையான "கர்த்தருடைய ஜெபமான," "பிரதான ஆசாரியத்துவ ஜெபத்தை," எங்கே, எப்போது, மற்றும் எவ்வாறு இயேசு ஜெபித்தார் என்பது பற்றிச் சிறிதளவே அறியப்பட்டுள்ளது. இந்த ஜெபம் ஒருவேளை ஜெபிக்கப்பட்டவற்றிலேயே மாபெரும் ஜெபமாக இருக்கலாம்! அவர் தமது அப்போஸ்தலர்களுக்காகவும், தமக்காகவும், நமக்காகவும் ஜெபித்தார்!*

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*